SE – 035

I Semester B.Com./B.B.A./B.H.M. Examination, January 2025
(SEP 2024-25)
TAMIL LANGUAGE (Part – I, Paper – I)

Time : 3 Hours Max. Marks : 80

## SECTION – A

I. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. (3×8=24)

1) வல்வில் ஓரியைக் கழைதின்யானையார் புகழ்ந்து பாடிய புறநானூற்றுப் பாடலின் கருத்துக்களை எழுதுக.

2) தோழி செவிலித்தாயை அணுகி வேண்டுதல் குறித்து குறிஞ்சிப்பாட்டில் கூறுவன யாவை ?

3) ''மருந்து'' என்னும் அதிகாரத்திலிருந்து எவையேனும் ஐந்து குறட்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்து வரைக ?

4) ஔவையார் அதியமான் நெடுமானஞ்சியை பற்றி பாடிய புறநானூற்று செய்திகளை கூறுக ?

5) குறிஞ்சிப்பாட்டில் ''தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே காதல் ஏற்பட்ட சூழ்நிலை'' குறித்து எழுதுக ?

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×4=20)

1) அமிழ்தம் இயைவது ஆயினும் 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே

2) அன்னாய் வாழி! வேண்டு அன்னை ஒண்ணுதல்
ஒலி மென் கூந்தல் என் தோழி!

3) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

4) செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த முந்நீர் விழவின்,
நெடியோன், நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே!

5) நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்

6) இளமையின் இகந்தன்றும் இலனே வளமையில்
தன் நிலை தீர்ந்தன்றும் இலனே !

P.T.O.

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×4=16)

1) உயிர் எழுத்துக்கள் என்றால் என்ன ? அவை யாவை ?

2) சார்பெழுத்துகள் சான்றுடன் எழுதுக ?

3) மொழி இறுதி எழுத்துக்களைப் பற்றி எழுதுக.

4) ஆய்த குறுக்கம் சான்றுடன் விளக்குக.

5) வினா எழுத்துக்கள் என்றால் என்ன ? அதன் வகைகளை கூறுக.

6) அளபெடை என்றால் என்ன ? அவை யாவை ?

## SECTION – C

IV. ''ஆத்தங்கரை ஓரம்'' என்னும் நாவலில் இருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விரிவான விடை தருக. (2×10=20)

1) அரசு அதிகாரிகளின் போக்குகள்.

2) சிந்தூர் மக்களின் அவலநிலை.

3) சிமனின் பாத்திரப் படைப்பு.

4) அணைகள் கட்டப்படுவதினால் ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகள்.